**கல்வியமைச்சு**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2018 மூன்றாந் தவணை

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**

மூன்று மணித்தியாலம்

**தமிழ் மொழியும் இலக்கியமும் I**

***மாதிரி வினாத்தாள்***

**கவனிக்க :**

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
* வினாத்தாள் 1ற்குரிய புள்ளிகள் 40 ஆகும்.
* 1 தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

* பின்வரும் வாக்கியங்களில் தடித்த எழுத்தில் அமைந்த சொல் பற்றிய வினாவுக்குப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. 'நெருங்கக் காண்பது **கன்னலிற்** செந்நெல்' - இங்கு கன்னல் என்பது,

(1) நெல் (2) முத்து (3) கரும்பு (4) நெற்கதிர்

02. 'குரவரையும், **கிளைஞரையும்** குலத்துரிய துணைவரையும்' - இங்கு கிளைஞர் என்பது,

(1) நண்பர் (2) உறவினர் (3) பகைவர் (4) சான்றோர்

03. 'கையின் ஈர்த்து இன்புறூஉம் **இளையோர்** போல்' - இங்கு இளையோர் என்பதன் எதிர்க்கருத்து

(1) ஆடவர் (2) வாலிபர் (3) இளைஞர் (4) முதியோர்

04. '**புல்லர்** நல்லோரை அறியார்' - இங்கு புல்லர் என்பதன் எதிர்ப்பதம்

(1) நல்லோர் (2) தீயவர் (3) அறிவிலார் (4) பேதையர்

05. '**குரு**வே குற்றத்தைக் களைந்து குணத்தை வளர்ப்பவர்' - இங்கு குரு என்பதன் எதிர்ப்பாற்சொல்

(1) குருத்தினி (2) குருபத்தினி (3) குருத்தி (4) குரவி

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

06. கருத்துப் பரிமாற்றத்திற்கான சமூக ஊடகங்களில் **whatsApp** உம் ஒன்றாகும். – whatsApp என்ற சொல்லிற்குரிய கலைச்சொல்

(1) சுட்டுரை (2) காணொளி (3) செயலிகள் (4) கட்செயலி

07. **இழை, பனுவல்** என்ற சொற்களைக் குறிக்கும் பொருள்

(1) கயிறு (2) புத்தகம் (3) கவிதை (4) மாலை

08. அறிஞர் அவை என்பது போல, சேனையைக் குறிக்கும் சொல்

(1) அணி (2) திரள் (3) கூட்டம் (4) தொகுதி

09. போத்து என்பது ஆண் புலியைக் குறிப்பது போல ஆண்குதிரையைக் குறிக்கும் சொல்

(1) கடுவன் (2) கலை (3) குண்டு (4) அலவன்

10. ஆயுள் முழுவதும் பிரமச்சாரியாக விரதம் காத்து வாழ்பவனைக் குறிக்கும் சொல்

(1) குரிசில் (2) துறவி (3) சிரஞ்சீவி (4) நைட்டிகன்

11. பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் சொற்களையும், சொற்றொடர்களையும் வைத்துக் கவி பாடுதல்,

(1) அறம்பாடுதல் (2) வசைக்கவி (3) அங்கதம்பாடுதல் (4) விகடகவி

12. **"தலைக்கனம்"** என்ற பொருளைக் குறிக்கும் மரபுத்தொடர்,

(1) தலைக் கொழுப்பு (2) தலை தடவுதல்
(3) தலையெடுத்தல் (3) தலைப்படுதல்

13. "உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா.." என்னும் பழமொழிக்கு இணையான பழமொழி

(1) யானை படுத்தால் குதிரை மட்டம் (2) அணை கடந்த வெள்ளம் அழுதாலும் வராது.
(3) கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா? (4) எடுப்பது பிச்சை ஏறுவது பல்லக்கு

14. போலி நியாயம் என்ற உட்கருத்தை உணர்த்தும் பழமொழி

(1) கைப்புண்ணுக்கு கண்ணாடி வேண்டுமா?
(2) முக்காலும் காகம் முழுகிக் குளித்தாலும் வெள்ளைக் கொக்காகுமா?
(3) வேலைக்கள்ளிக்குப் பிள்ளைப் பராக்கு
(4) பொரிமாவை மெச்சினான் பொக்கைவாயன்

15. பயனற்றது என்னும் பொருள் தவிர்ந்த வேறு பொருள் தரும் உவமைத்தொடர்

(1) காட்டில் எறிந்த நிலாப்போல (2) மீட்டல் செய்யா யாழ் போல
(3) நீர்க்குமிழி போல (4) புறக்குடத்து நீர் போல

16. "அழகான நடைவண்டி அசைந்தாடும் கிலு கிலுப்பை" இங்கு கிலு கிலு என்பது

(1) அடுக்குத் தொடர் (2) இணைமொழி (3) அடுக்கிடுக்குத்தொடர் (4) இரட்டைக்கிளவி

17. பின்வருவனவற்றுள் உருது மொழிச்சொல்

(1) புகார் (2) ரொக்கம் (3)பட்டாணி (4)இலாகா

18. வடக்குப் பிரதேசத்தில் வழக்கிலுள்ள சொற்றொகுதி,

(1) இஞ்சை, பேந்து, கனக்க (2) ஏனம், பசுந்து, எப்பன்
(3) மோள், எல, விறாந்தை (4) இம்புட்டு, வெள்ளாமை, சங்கை

19. பின்வருவனவற்றுள் இலக்கணக் போலியாக அமையாத ஒரு சொல்

(1) வாயில் (2) முன்றில் (3) தடைவாய் (4) கோவில்

20. பின்வருவனவற்றுள் எதிர்ப்பொருள் தரும் இணைமொழி

(1) அமளி துமளி (2) விதிவிலக்கு (3) சந்து பொந்து (4) நரை திரை

**பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.**

21. உயிர்மெய்க் குற்றெழுத்துக்களின் எண்ணிக்கை

(1) 126 (2) 90 (3) 30 (4) 216

22. வன்றொடர்க் குற்றியலுகரச் சொற்களைக் கொண்ட சரியான சொற்றொகுதி

(1) பத்து, கொக்கு, புற்று (2) பங்கு, புற்று, பாக்கு
(3) வண்டு, கொய்து, பசு (4) சங்கு, வாக்கு, ஆடு

23. பின்வருவனவற்றுள் கூட்டுப் பெயராக அமைவது

(1) காப்பியம் (2) அகந்தை (3) உரைகல் (4) தெரிவை

24. எதிர்காலப் பெயரெச்சமாகவும், முற்றாகவும் அமைவது,

(1) ஓடுகின்ற மேகங்கள் (2) பறக்கும் விமானம் (3) ஆடிய மயில் (4) விழுந்த மரம்

25. மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது. இங்கு விழுந்தவனை என்பது,

(1) வினையெச்சம் (2) தொழிற்பெயர் (3) வினையாலணையும் பெயர் (4) பெயரெச்சம்

26. பின்வருவனவற்றுள் 6ம் வேற்றுமையுருபு மறைந்து வந்துள்ள சொல்,

(1) மலையருவி (2) உள்ளக்கமலம் (3) கூண்டுக்கிளி (4) இராமபாணம்

27. "மார்கழியோடு பரீட்சை முடிவடைகிறது" என்ற வாக்கியம் உணர்த்தும் வேற்றுமைப் பொருள்

(1) வரையறைப்பொருள் (2) காரணப்பொருள் (3)எல்லைப் பொருள் (4) நீங்கற் பொருள்

28. நிலமே, நீரே, தீயே என்பவற்றில் ஏகார இடைச்சொல் உணர்த்தும் பொருள்

(1) பிரிநிலை (2)எண் (3) தேற்றம் (4) வினா

பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்ற சொற்றொகுதியைத் தெரிவு செய்க.

29. (1) இயல்புப்புணர்ச்சி – தமிழ்மொழி, கடலலை, தேன்மொழி

(2) திரிதல் விகாரப்புணர்ச்சி – மட்குடம், கடற்கரை, பற்பொடி

(3) கெடுதல் விகாரப்புணர்ச்சி – மரவேர், நீலவானம், தாகசாந்தி

(4) தோன்றல் விகாரப்புணர்ச்சி – பூ மரம், வாழைமரம், திருவடி

30. (1) தெரிநிலை வினை – வந்தேன், செல்வான், படிக்கின்றார்

(2) தன்வினை – நனைந்தேன், திருந்தினேன், உண்டேன்

(3) வினையெச்சம் - சென்று, பறந்து, நடந்து

(4) செயப்பாட்டுவினை – எழுதப்பட்டது, இயற்றினார், வந்தவன்

**புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

31. அரசாங்கம் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ………………….. வழங்கியது.

(1) இழப்பீடு (2) மதிப்பீடு (3) காப்பீடு (4) முதலீடு

32. அரசாங்கம் சமாதானத்தை நிலைநாட்ட தேசிய நல்லிணக்க ………………. ஒன்றை அமைத்துள்ளது.

(1) ஆணையாளர் (2) பணிப்பாளர் (3) ஆணைக்குழு (4) நிர்வாகக்குழு

33. இலை குழைகளால் வேயப்பட்ட குடிசை ………………….. எனப்படும்

(1) ஆச்சிரமம் (2) பன்னசாலை (3) ஆதுலர்சாலை (4) பாசறை

34. சுற்றுலாத்துறையின் வளர்ச்சியால் எமது நாட்டின் ………………… வீதம் அதிகரித்துள்ளது.

(1) மூலதனம் (2) முதலீடு (3) மானியம் (4) அந்நியச் செலாவணி

**வாக்கியங்களின் முற்பகுதிக்குப் பொருத்தமான முடிக்கும் பகுதியைத் தெரிவு செய்க.**

35. மனிதர்களிடையே ஏற்றத் தாழ்வுகள் தோன்றி மனிதனை மனிதன் …………………………

(1) அடக்கியாள்கின்றான் (2)அடக்கி ஆளலாம்
(3) அடக்கி ஆள்கின்றார்கள் (4) அடக்கி ஆள்வார்

36. நூலகத்திலுள்ள ஒவ்வொரு …………………………………..

(1) புத்தகங்களும் பயனுடையது.
(2) புத்தகமும் பயனுடையது.
(3) புத்தகமும் பயனுடையன.
(4) புத்தகங்களும் பயனுடையன.

தரப்பட்ட பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக

" ஆதவனும் கீழ்த்திசையில் தோன்றிவிட்டான்
ஆகா! இவ்வுலகமெலாம் அழகின் சோதி!
சீதமிகும் சோலையினில் தென்றல் வீசும்
செம்மலர்கள் முகந்திறந்தே தேனைச் சிந்தும்
மோதி விழும் வண்டுகளும் முழங்கும் பண்ணை
மூக்கினிலே மகரந்த வாசம் வீசும்
கீதமெல்லாம் குயிலுக்கே கிளிகள் பேசும்
கிளையிடையே தாவுகின்ற கதிரைக் கண்டே".

37. இங்கு செம்மலர் என்பது,

(1) கார்த்திகைப் பூ (2) அல்லிப் பூ (3) தாமரைப் பூ (4) செவ்வரத்தைப் பூ

38. இப் பாடலில் காணப்படும் அணி

(1) உவமையணி (2) தன்மை நவிற்சியணி (3) உருவக அணி (4) உயர்வு நவிற்சியணி

39. சீதமிகு சோலை என்ற தொடரில் புலப்படும் சோலையின் சிறப்பு யாது?

(1) ஒளி நிறைந்தது (2) வாசனைமிக்கது (3) தென்றல் வீசுவது (4) குளிர்ச்சிமிக்கது

40. கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குபெற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தியொன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க.

அ. அதாவது தன்னலம் பெற விரும்பும் போது பிறர் நலனையும் கவனிக்க வேண்டும்

ஆ. பிறர் நலம் பேணுகிறவர் என்று புகழ் பெற்ற யாரும் கைதேர்ந்த சுயநலவாதிகளாகத்தான் இருந்திருக்கிறார்கள்

இ. சுயநலமென்பது அப்படியொன்றும் கீழ்த்தரமான தத்துவமல்ல.

ஈ. இந் நிபந்தனையோடு எவ்வளவு வேண்டுமானாலும் ஒருவர் சுயநலவாதியாக இருக்கலாம்

உ. ஒவ்வொருவரும் அவரவர் நலத்தை ஒழுங்காகப் பார்த்துக்கொள்ள வேண்டும்.

(1) இ,உ,அ,ஈ,ஆ (2) இ,ஆ,ஈ,அ,உ (3) ஆ,உ,ஈ,இ,அ (4) ஈ,உ,அ,இ,ஆ

**கல்வியமைச்சு**

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2018 மூன்றாந் தவணை

**தமிழ் மொழியும் இலக்கியமும் I, II**

## தமிழ் மொழியும் இலக்கியமும் II

***மாதிரி வினாத்தாள்***

**கவனிக்க :**

* எல்லா வினாக்களுக்கும் விடை தருக. விடைகளைத் தெளிவான கையெழுத்தில் எழுதுக.
* வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1. சுருக்கமான விடை தருக.

I. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்தெழுதுக.

"நைவீர லீர்மைந்தீ ரினித் துயரா னாடிறந்து"

II. பின்வரும் பேச்சு வழக்குத்தொடரை எழுத்து வழக்காக மாற்றியெழுதுக.

"இதில நிண்டியோ ஏப்பைக் காம்பாலை வாங்கப் போறாய்"

III. எண் என்ற சொல் பெயராகவும், வினையாகவும் வரத்தக்கதாக தனித் தனி வாக்கியங்கள் எழுதுக.

IV. பின்வரும் வாக்கியத்தை மயக்கம் நீக்கி எழுதுக.

"நவீன மயப்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான நூலகம் அதிக பயனளிப்பதாக இருந்தது".

V. பின்வரும் வாக்கியத்தின் எழுவாய் பயனிலைகளைக் குறிப்பிடுக.

"அரைக் காசுக்குப் போன மானம் ஆயிரம் பொன் கொடுத்தாலும் வராது"

VI. உச்சி குளிர்தல் என்ற மரபுத்தொடர் குறிக்கும் பொருள் யாது?

VII. ஒட்சிசனின் அளவு குறைவானால் மனிதனால் செயற்படமுடியாது என்பதனை விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். இவ் வாக்கியத்தின் தலைமைத் தொடர் சார்புத் தொடர் என்பவற்றை எழுதுக.

VIII விவாதத்தின் போது தவிர்க்கப்பட வேண்டியவை

முன்பின் முரணாகக்கூறல், ஆதாரமின்றிப் பேசுதல், தலைப்பை விளக்குதல், கருத்தை வெட்டிப் பேசுதல்

IX. பின்வரும் வாக்கியத்துக்கு மிகப் பொருத்தமான நிறுத்தற் குறியினையிட்டு மீண்டும் எழுதுக.

அன்று நான் எக் காரணத்திலாவது கப்பலுக்கு வந்து சேராவிட்டால் என்னைப் பற்றி எவ்விதம் விசாரிப்பீர்கள்

X நிலாவிற்கு நடனம் ஆடத்தெரியும்
நிலாவிற்கு பாடல் பாடத் தெரியும்
"உம்" என்ற இணைப்பிடைச் சொல்லைப் பயன்படுத்தி, இவ்விரு வாக்கியங்களையும் இணைத்து ஒரு வாக்கியமாக எழுதுக.

2. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து ஏறத்தாழ 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்துக்குப் பொருத்தமாகத் தலையங்கம் இடுக.

அ. சமூகத்திற்கிடையிலான முரண்பாடுகள் நாட்டினை அழிவுப்பாதைக்கு இட்டுச் செல்கின்றன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். நாட்டின் அபிவிருத்திக்கும், சகல துறைகளின் முன்னேற்றத்திற்கும் மக்களின் மகிழ்ச்சியான வாழ்விற்கும் சமூகத்திற்கிடையிலான இணக்கமான வாழ்வே அவசியமாகும் என்பதை வலியுறுத்தும் வகையில் ஒரு **விளக்கக் கட்டுரை**

ஆ. பெண்கள் போற்றுதற்குரியவர்கள். குடும்பத்திலும், சமூகத்திலும் சிறப்புடையவர்கள். கலை, கலாசாரம் பேணுபவர்கள். இன்றைய பெண்கள் கல்வி, தொழில், சமூகத்தொண்டில் ஆண்களுக்குச் சமமானவர்களாக விளங்குகின்றனர், எனவே பெண்களை மதிக்க வேண்டும் என்ற கருத்துப்பட மகளிர் தினத்தை முன்னிட்டு நீர் நிகழ்த்தும் **மேடைப்பேச்சு**

இ. இன்று வயது வேறுபாடின்றி யாவரும் முகப்புத்தகப் பாவனையில் ஈடுபட்டு வருகின்றனர். அதற்கு அடிமையாகியும் வருகின்றனர். முகப்புத்தப் பாவனை தொடர்பாடல், தகவல் பரிமாற்றம் போன்றவற்றிற்கு உதவுகின்றது என்ற கருத்துடைய ஒருவருக்கும், சமூகச் சீரழிவுகளுக்கெல்லாம் வலுவூட்டுகின்றது என்ற கருத்துடைய இன்னொருவருக்குமிடையேயான ஓர் **உரையாடல்**

ஈ. விதுரன் ஒழுக்கம், படிப்பு இரண்டிலும் சிறந்து விளங்குபவன். என்றாலும் அவனது குடும்ப வறுமை தொடர்ந்து கல்வி கற்கத் தடையாக இருந்தது. இந் நிலையில் விதுரன் கல்விக்கு முழுக்குப் போட எண்ணினான். ஆனாலும் உள்@ர அதை அவன் மனது ஏற்றுக் கொள்ளாத போது திடீரென ஒரு நாள் ஊரின் தனவந்தர் ஒருவர் அவன் வீட்டிற்கு வருகை தருகிறார். இதனைக் கருவாகக் கொண்டு ஒரு **சிறுகதை** எழுதுக.

3. கீழே தரப்பட்டுள்ள உரைப்பகுதியின் **சுருக்கத்தை** 40 - 45 சொற்களில் அமையக்கூடியவாறு எழுதுக.
(சொற்களின் எண்ணிக்கையை குறிப்பிடுக)

நோக்கமும் கொள்கையும் மக்கள் வாழ்க்கைக்காக – மக்களுக்காக ஏற்பட்டவைகளே. மதமும் மொழியும் அப்படியே மக்களின் நன்மைக்காக ஏற்பட்டவைகளே. ஆனால், இன்று இந்தியா முழுவதும் நான் காணும் காட்சி மதத்துக்காக, மொழிக்காக, நோக்கத்துக்காக, கொள்கைக்காக, என்று இப்படிப்பட்ட காரணங்களுக்காக, மக்கள் சாகின்றார்கள்: வதைபடுகின்றார்கள்: அஞ்சுகின்றார்கள்: அலைகின்றார்கள்: ஒருவரை ஒருவர் பகைக்கின்றார்கள். பட்டுப்பூச்சி தானே நூல் உண்டாக்கித் தன்னையே சுற்றிக்கொண்டு தானே ஏற்படுத்திய அந்த வலைக்குள் தானே கிடந்து வருந்துகின்றதல்லவா? மனிதனும் அப்படியே தன் மூளையைக் கொண்டு தானே ஏற்படுத்திக் கொள்கின்ற கொள்கை வலைக்குள் தானே அகப்பட்டு அழிகின்றான். இன்று உலகத்தில் மக்கள் படும் தொல்லைக்கு காரணம் என்ன? பூனைகளோ அல்லது புலிகளோ மாநாடு கூடி மக்களைக் கெடுக்கச் செய்த சூழ்ச்சியா இது? அல்லது கழுகுகளும் புழுக்களும் பிணங்கள் போதாத குறையை உணர்ந்து பிணங்களைப் பெருக்குவதற்காக ஏற்படுத்திய போர்களா இக் காலத்துப் போர்கள்? எந்த விலங்கும் எந்தப் பறவையும் எத்தகைய சூழ்ச்சியும் செய்து மனிதனைக் கெடுக்க முயலவில்லை. மனிதன் மூளையில் தோன்றிய சில தவறான எண்ணங்களுக்கு மனிதன் அடிமையாகி அழிந்து போகின்றான். வாழ்வுக்காகக் கண்டான் கொள்கைகளை. நாளடைவில் கொள்கைகளுக்காக வாழ்வைப் பலி கொடுக்கிறான். அரசியல் கொள்கை வலுக்கின்றது. மதம் ஆகின்றது: எதிர்க்கட்சிகளை வளர்க்கின்றது: எதிர்பாராத போர்களை உண்டாக்குகின்றது: ஒன்றும் அறியாத பாமர மக்கள் படமுடியாத துன்பங்களைப் பட்டு வருந்துகின்றார்கள். உயர்ந்த நோக்கந்தான். ஆனால், ஓயாத தொல்லையாக மூள்கின்றன. காரணம் இல்லாமல் ஏழை மக்கள் துன்பங்களுக்கு ஆளாகின்றார்கள்: இதைக் கண்ட உலகத் தலைவர்கள் நெஞ்சம் கலங்குகின்றார்கள். மெல்ல மெல்ல உண்மையை உணர்த்தி உதவ முயல்கின்றார்கள் கொள்கையைவிட உயர்ந்த நோக்கத்தைவிடப் பொதுமக்களின் உயிர் வாழ்க்கை விலையுயர்ந்தது என்பதைத் தெளியச் செய்கின்றார்கள்.

4. பின்வரும் உரைநடைப் பகுதியை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

''எதனையும் கற்றுக் கொள்வதற்குரிய சிறந்த வழி என்ன தெரியுமா? நீ எதைக் கற்க விரும்புகிறாயோ, அந்தச் செயலைச் செய்து பார்க்க வேண்டும். நீந்தக் கற்க விரும்புகிறவன் நீரில் துணிந்து இறங்கி விட வேண்டும். நீரைக் குடித்தாவது நீந்த முயல வேண்டும். அதே போன்றுதான் மன ஒருமைப்பாட்டை அறிந்து கொள்ள எளிதான முறை மனத்தை ஒருமைப்படுத்துவதைச் செய்து பார்ப்பதுதான். நீந்தும் திறனை உடையவன் எவ்வாறு நீச்சலைத் திரட்டித் தர முடியாதோ அதே போலவே மன ஒருமை பெறும் திறனையும் வேறு ஒருவரால் கொடுக்க முடியாது. மன ஒருமைப்பாடு என்பது ஒருவர் கொடுக்க பெற்றுக் கொள்கின்ற கடைச்சரக்கன்று எதையும் செய்து பழக்கப்படுத்த வேண்டும். வித்தை நிலத்தில் ஊன்றி நீர் ஊற்றலாம். வளரச் செய்ய முடியாது. மரத்தின் வேலை தான் வளர்வது. எதையும் முடியும் என்ற நம்பிக்கையுடன் செய்து பார்!'' எல்லாவற்றையும் அறிந்து கொள்வாய்.

**வினாக்கள்.**

i) ஒரு விடயத்தைக் கற்றுக் கொள்வதற்கான வழி என்ன?

ii) மன ஒருமைப்பாடு அடைய என்ன செய்ய வேண்டும்?

iii) ''கடைச் சரக்கு'' என்ற தொடரினை ஆசிரியர் பயன்படுத்துவதன் காரணம் என்ன?

iv) ''மரத்தின் வேலை, தான் வளர்வது'' இத் தொடர் மூலம் உணர்த்தப்படும் விடயத்தை குறிப்பிடுக.

v) இப் பந்தியில் மனிதர்களுக்கு கூற விரும்பும் அறிவுரைகள் இரண்டு தருக.

5. இலங்கையின் போக்குவரத்துத் துறையில் தற்போது அமுல்படுத்தப்பட்டுள்ள சட்ட திட்டங்கள் பற்றியும் போக்குவரத்து விதிகளை அனுசரிப்பதன் அவசியம் பற்றியும் விளக்கம் கேட்கும் உமது நண்பனுக்கு 100 சொற்களில் **கடிதம்** எழுதுக.

அல்லது

உமது பாடசாலையில் இடம்பெற்ற பரிசளிப்பு விழாக்குழுவின் செயலாளராக உம்மைக் கருதிக் கொண்டு அறிக்கை ஒன்று தயாரிக்குக.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை – 2018 மூன்றாந் தவணை

**தமிழ் மொழியும் இலக்கியமும் III**

இரண்டு மணித்தியாலம்

**தமிழ் மொழியும் இலக்கியமும் III**

***மாதிரி வினாத்தாள்***

**கவனிக்க :**
* அறிவுறுத்தலுக்கேற்ப ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.
* **1,2,3,4** ஆகிய வினாக்களுக்கும் **5,6,7** ஆம் வினாக்களில் ஏதாவது **ஒரு** வினாவிற்கும் விடை எழுதுக.
* இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்.

1. சுருக்கமான விடை தருக.

(i) "எட்டுணையாயினும் இரவாது தான் ஈதல்
எத்துணையும் ஆற்றல் இனிது"

அ. இங்கு இனிய செயலாகக் குறிப்பிடப்படுவது யாது?

ஆ. இனியவை நாற்பது என்ற நீதி நூலை இயற்றியவர் யார்?

(ii) "கதிகள் யாவும் தருமென லோர்ந்திட
கண்ணிலாதவர் போலத் திகைப்பர்"

அ. கண்ணிலாதவர் எனக் கவிஞர் யாரைக் குறிப்பிடுகிறார்?

ஆ. கதி என்பதன் பொருள் யாது?

(iii) சத்யஜித்ரேயின் பதேர் பாஞ்சாலியில் பருவங்கள் மாறுவதை சில மயங்கித் தெளிதல்கள் மூலம் உணர்த்துகிறார்?

அ. இங்கு 'மயங்கித் தெளிதல்' என்றால் என்ன?

ஆ. இக்கூற்று இடம்பெற்ற கட்டுரையை எழுதியவர் யார்?

(iv) "வெண்ணிற மேகங்கள் நிலவை மூடிமூடி ஆலிங்கனம் செய்கையில் உறை தயிரின் பாலாடையோ" என வியக்க வைத்தது.

அ. உறை தயிராகக் குறிப்பிடப்படுவது யாது?

ஆ. இக் கூற்று இடம்பெற்ற சிறுகதை எது?

(v) "கழா அக்கால் பள்ளியுள் வைத்தற்றால் - சான்றோர்
குழா அத்தப் பேதை புகல்"

அ. கழா அக்கால்

ஆ. குழாத்து என்ற தொடர்கள் புலப்படுத்துவன யாவை?

(vi) 'சுடு மயானத்திடை தன் றுணயேகத்
தோன்றுயர்க் கடலி னேகக் ….."

அ. துணை எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

ஆ. 'துயர்க்கடல்' என்பது எவ்வகை அணி?

(vii) ‘‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’’

அ. இப்பாடல் இடம்பெற்ற நூல் எது?

ஆ. இக்கூற்று உணர்த்தும் கொள்கை யாது?

(viii) ‘‘இந்தப் பைல் இஞ்ச எப்படி வந்தது?’ இக்கூற்று,

அ. யாரால்

ஆ. யாருக்கு கூறப்பட்டது.

(ix) ‘‘அரவு உயர்த்தோன் கொடுமையினும் முரசு உயர்த்தோய் உனது அருளுக்கு அஞ்சினேனே’’

அ. பாம்புக் கொடியை உயர்த்தியவன் யார்?

ஆ. வீமன் எதற்கு அஞ்சுகிறான் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது?

(x) ‘‘கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
கககன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்’’

அ. கானவர்கள் வாழ்விடம் எது?

ஆ. காயசித்தி என்றால் என்ன?

2. பின்வரும் செய்யுட் பகுதிகள், உரைநடைப் பகுதிகளை வாசித்து, அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

(1) யானை அனையவர் நண் பொரீஇ நாயனையார்
கேண்மை கெழீ இக் கொளல் வேண்டும் - யானை
அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்த வேல்
மெய்யதா வால் குழைக்கும் நாய்

அ) இப் பாடலில் உணர்த்தப்படுவது யாது?
ஆ) இப் பாடலில் இடம் பெற்றுள்ள உவமையணியின் பொருத்தப்பாட்டை விளக்குக.

(2) ஓர்தட்டி லேபொன்னும் ஓர் தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்திலே தங்கள் காரியப்பேர்
ஆர்தட் டினும்தட்டு வாராமலே அன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.

(அ) கொடிய பஞ்ச காலம் எவ்வாறு எடுத்துரைக்கப்படுகின்றது?
(ஆ) சீதக்காதியின் கருணை மனப்பாங்கு எவ்வாறு புலப்படுகின்றது?

(3) வயிரம் எனும் சுடு நெருப்பை மிக மூட்டி
வளர்க்கின் உயர் வரைக்காடு என்ன
செயிர் அமரில் வெகுளி பொர சேர இரு
திறத்தேமும் சென்று மாள்வோம்
கயிரவமும் தாமரையும் கமழ் பழனக்
குரு நாட்டில் கலந்து வாழ
உயிர் அனையாய் சந்துபட உரைத்தருள் என்றான்
அறத்தின் உருவம் போல்வான்

(அ) இப் பாடல் அடிகளில் போரால் உண்டாகும் விளைவாகக் கூறப்படுவது யாது?
(ஆ) ‘கயிரவமும் தாமரையும் கமழ் பழனக் குருநாட்டில்’ என்ற தொடர் மூலம் புலப்படும் தர்மனின் மன விருப்பம் யாது?

3. உருக்கி எடுத்த இரும்பினால் செய்த ''ரெமிங்டன்'' தட்டெழுத்துப் பொறியில் நான் ஆரம்பகால தீட்சை பெற்றவன். அதைத் தூக்க இரண்டு பேரும், வைக்க நாலு பேரும் வேணும், நகல் எடுக்கும் மெசின்கள் வருவதற்கு முன்னரான ஒரு காலம் அது. ஏழு கார்பன் தாள் வைத்து, கைகளை தலை உயரத்துக்கு தூக்கி, மூச்சைப் பிடித்து 'தேடிக் குத்தி' டைப் செய்வதில் நான் ஒரு விண்ணன் என்று பேர் வாங்கியவன். இப்படி ஒரு ஆழ்ந்த பரவசத்தோடு நான் தட்டெழுத்து லீலைகள் செய்யும் போது அம்மி பொளிவது போல ஒரு விதமான சத்தம் வரும் என்று சொல்வார்கள்.

(அ) ஆரம்பகாலத் தீட்சை என்ற தொடர் இங்கே என்ன பொருளில் கையாளப்பட்டுள்ளது?

(ஆ) 'தேடிக் குத்தி' டைப் செய்தல் எனும் தொடரினூடாக தட்டெழுத்துப் பொறி பற்றி நீர் விளங்கிக் கொள்வது யாது?

4. வட ஆரியர் தமிழ் நாட்டிற்கு வந்த காலத்திலும், சமணர், ஐரோப்பியர் ஆகிய பிற நாட்டார் செல்வாக்கடைந்த காலத்திலும் தமிழர் பண்பாடு அடிப்படைக் கொள்கைகளில் அவ்வளவு மாற்றம் அடையவில்லை. பிற சமயங்களைப் போதித்த பார்ப்பனரும், சமணரும், புத்தரும், ஐரோப்பியக் கிறிஸ்தவரும், மகமதியரும் தமிழர் பண்பாட்டைத் தழுவ முயன்றனர். இந்து சமயத்தின் வழிபாட்டு முறையும், இலக்கியங்களும் தென்னாட்டுத் தத்துவங்களால் வளம் பெற்றன. வட மொழியிலுள்ள சமய இலக்கியங்கள் பல சங்கரர், இராமானுஜர், மாதவர் போன்ற தென்னாட்டவரின் மூலமாகத் தென்னாட்டுத் தத்துவங்கள் வடமொழியில் இடம்பெற்றன. சு. நீதிகுமார் சட்டர்ஜி, இந்திய பண்பாட்டின் எழுபத்தைந்து விழுக்காடு திராவிட பண்பாடு என்று குறிப்பிட்டுள்ளார். சமணரியற்றிய சிலபதிகாரத்தையும் புத்தரியற்றிய மணிமேகலையையும், வீரமாமுனிவரியற்றிய தேம்பாவணியையும், உமறுப்புலவர் இயற்றிய சீறாப்புராணத்தையும் ஆராயுங்காலை இவர்கள் தம் சமயங்களின் கோட்பாடுகளைக் கூறினாலும் தமிழர் பண்பாட்டை எங்ஙனம் விளக்கியுள்ளாரென்பதும் புலனாகிறது.

(அ) தமிழர் பண்பாட்டோடு கலந்த பிற பண்பாடுகளால் ஏற்பட்ட மாற்றம் யாது?

(ஆ) சீறாப்புராணம், தேம்பாவணி என்ற நூல்கள் எவ்வெவ் மதங்களை அடிப்படையாகக்கொண்டவை?

3. நாட்டார் பாடற் பகுதியை அடிப்படையாகக் கொண்டு,
  அ. ஏர்ப்பாடல்
  ஆ. அருவி வெட்டுப் பாடல்
  இ. காதற்பாடல்
ஆகியனற்றில் புலப்படும் கிராமப்புற மக்களின் வாழ்வியல் அம்சங்கள் பற்றி விளக்குக.

**அல்லது**

''குழந்தையென எனது மனம் குதூகலிக்கும்'' என்ற பாடற்பகுதியை அடிப்படையாகக் கொண்டு வன்னி வளநாட்டின் இயற்கை அழகு சித்திரிக்கப்படுமாற்றினை விளக்குக.

4. 'நாவலர் எழுந்தார்' என்ற கட்டுரைப் பகுதியில்,
  அ. நாவலரின் நேர்மை
  ஆ. பிறிற்றோவின் நேர்மையீனம்
ஆகியன எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

**அல்லது**

'இலட்சியமும் சமநோக்கும்' என்ற கட்டுரையில்,
  அ. இலட்சியவாதிகளின் இலட்சியத்தில் ஏற்பட்ட இடையூறுகள்
  ஆ. இலட்சியவாதிகள் இலட்சியத்தால் அடைந்த பயன் ஆகியன எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

*** 5,6,7 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றினைத் தெரிவு செய்து விடை எழுதுக.**

5. நீதிப் பாடலான ''தண்டாமரையினுடன் பிறந்தும்'' என்ற பாடலில்
  அ. அறிவுள்ளவரின் அறிவு
  ஆ. அறிவற்றவரின் அறியாமை
ஆகியன எடுத்துரைக்கப்படுமாற்றினை விளக்குக.

6. கம்பராமாயணம் குகப்படலத்தில் பரதன் குகனுக்கு,
  அ. கோசலை
  ஆ. கைகேயி
ஆகியோரை அறிமுகப்படுத்திய விதம் பற்றி விளக்குக.

7. 'எது நல்ல சினிமா' என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு நல்ல சினிமாவின் அம்சங்கள் பற்றி விளக்குக.

***